சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 22.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 98/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | பழனிசாமி |
| தந்தை பெயர் | : | சோழியப்பன் |
| கிராமம் | : | கரூர் |
| தாலுக்கா | : | கரூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆணையர்<br>மதுரை மாநகரம் |
| வயது | : | 54 |

2026 ம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 13 மற்றும் 15 முதல் 18 எதிரிகள் ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் தற்பொழுது மதுரை திலகர் திடல் சரகத்தில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.11.2019-ம் தேதி திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த சமயத்தில் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் செயல்முறை ஆணை நா.கா.132/SJ &HR/TVR/2019 dated:02.11.2019 பிறப்பித்துள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.531/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307 இ.த.ச உ/இ 3(1)(s) SC/ST -ன் கீழான வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.11.2019-ம் தேதி 22.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினம் அகால நேரம் என்பதால் 03.11.2019-ம் தேதி அதிகாலையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு திருத்துறைப்பண்டி அரசு மருத்துமனைக்கு சென்று அ.சா.1 பரமசிவம் என்பவரை விசாரித்தும், அதன்பிறகு சம்பவம் இடம் சென்று 03.11.2019-ம் தேதி 06.30 மணிக்கு சம்பவம் இடத்தை பார்வையிட்டு அ.சா.2 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்டுகிறது. பின்னர் சாட்சிகள் அ.சா.2 முருகானந்தம், அ.சா.3 ஆறுமுகம் ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர், சாட்சிகளை விசாரணை செய்த வகையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்ட வகையிலும் சம்பவம் உண்மை என தெரியவர ரகசிய தகவலின் பேரில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 7-ம் எதிரி தாமஸ், 12-ம் எதிரி சேகர், 13-ம் ரவி, 14-ம் எதிரி அண்ணாதுரை மற்றும் 15-ம் எதிரி நாகராஜன் ஆகியோர்களை திருத்துறைப்பூண்டி - திருவாரூர் மெயின்ரோட்டில் உள்ள வேலூர் பாலம் அருகே இருந்தவர்களை 03.11.2019-ம் தேதி காலை 11.00 மணிக்கு கைது செய்து விசாரித்த போது 7-ம்

எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதை சாட்சிகள் அ.சா.5 செந்தில்குமார் மற்றும் அ.சா.6 ஜீவா ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 7-ம் எதிரியானவர் இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தில் 1-ம் எதிரி பயன்படுத்திய கம்பியை மறைத்து வைத்துள்ள இடத்தை தன்னை அழைத்து சென்றால் அடையாளம் காண்பிப்பேன் என கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கக்கூடிய பகுதி மட்டும் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதன்பேரில், இந்த 7-ம் எதிரி அவர் சொன்ன இடமான திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி மெயின்ரோட்டில் அமைந்துள்ள சுமைதாங்கி பாலம் மற்றும் வாய்க்கால் அருகில் இருந்து ஆஜர் செய்த 1 இஞ்ச் தடிமனான 80 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பியை காலை 12.30 மணியளவில் சாட்சிகள் அ.சா.5 செந்தில்குமார் மற்றும் அ.சா.6 ஜீவா ஆகியோர்கள் முன்னிலையில் மகஜர் ஒன்றை தயார் செய்து கைப்பற்றினேன். அந்த இரும்பு கம்பி சா.பொ.1 ஆகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.28** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சான்றுபொட்களுடன் எதிரியை நிலையம் அழைத்துவந்து பின்னர் உரிய நடைமுறைகளை கடைபிடித்து படிவம் 91-ன் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் எண்.91 **அ.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், அன்றைய தினம் சாட்சிகள் அ.சா.1 பரமசிவம், அ.சா.2 முருகானந்தம், அ.சா.3 ஆறுமுகம், அ.சா.4 மதியழகன், அ.சா.5 செந்தில்குமார் மற்றும் அ.சா.6 ஜீவா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 04.11.2019-ம் தேதி இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அ.சா.7 ஜெயமாலினி, சாட்சி கண்ணம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் இந்த வழக்கில் வாதிக்கும், எதிரிகளுக்கும் உண்மை தன்மை சான்றுபெற திருத்துறைப்பூண்டி வட்டாட்சியருக்கு திருத்துறைப்பூண்டி உட்கோட்ட நமுனா எண்.145/2029, 146/2019-ன் படி

வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 15.11.2019-ம் தேதியன்று இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 பரமசிவம் என்பவருக்கு சிகிச்சையளித்த திருத்துறைப்பூண்டி மருத்துவர் அ.சா.10 அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 18.11.2019-ம் தேதி வாதிக்கும், எதிரிகளுக்கும் சாதி சான்றிதழ் வழங்கிய திருத்துறைப்பூண்டி வட்டாட்சியரை விசாரித்து அ.சா.1 பரமசிவம் என்பவர் இந்து பள்ளர் வகுப்பை சார்ந்தவர் என **அ.சா.ஆ.5** ஆன சாதி சான்றிதழ் பெற்று வந்தேன். பின்னர், 2 முதல் 18 வரையிலான எதிரிகளுள் இந்து பள்ளர் வகுப்பை சார்ந்தவர்கள் என **அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.22** வரையிலான சாதி சான்றிதழ்கள் பெற்று வந்தேன். 1-ம் எதிரி கோபால்ராமன் என்பவர் செங்குந்தமுதலியார் என சாதி சான்றிதழ் வழங்கிய அ.சா.9 செந்தில்குமார் என்பவரை விசாரித்து **அ.சா.ஆ.23 ஆன** சாதி சான்றித பெற்றேன். அன்றைய தினம் சாட்சிகள் அ.சா.8 ராஜன்பாபு, அ.சா.9 செந்தில்குமார் மற்றும் அ.சா.11 ஆய்வாளர் அறிவழகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் 27.11.2019-ம் தேதி இந்த வழக்கில் மற்ற எதிரிகளான 1-ம் எதிரி கோபால்ராமன், 2-ம் எதிரி முத்துக்குமார், 3-ம் எதிரி முருகையன், 4-ம் எதிரி பிரபாகரன், 5-ம் எதிரி ராஜ்குமார், 6-ம் எதிரி ரங்கசாமி, 8-ம் எதிரி ராஜா 9-ம் எதிரி பிரபு (எ) பிரபாகரன் 10-ம் எதிரி கருணாநிதி 11-ம் எதிரி ராமதாஸ், 16-ம் எதிரி 4 சாக்ரடீஸ், 17-ம் எதிரி முத்தரசன், 18-ம் எதிரி பாரதி ஆகியோர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி திருவாரூர் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கு சம்பந்தமாக பிணை மனு பெற்று சரணடைந்துள்ளனர். இந்த வழக்கில் விசாரணை முடித்து 29.11.2019-ம் தேதி 1-ம் எதிரி மீது 147, 148, 294(பி), 324, 307, இ.த.ச உ/இ 3(1)(v) SC/ST (PoA) Act-ன் கீழும், எதிரிகள் 2 முதல் 18 வரை உள்ளவர்களுக்கு 147, 148, 294(பி), 324 மற்றும் 307 இ.த.ச ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நடந்ததாக சொல்லப்படும் வழக்கு சம்பவமானது அ.சா.1-க்கும், எதிரிகளுக்கும் விவசாய நிலத்தில் சாகுபடி செய்வது குறித்து ஏற்பட்ட பிரச்சனைதான் என்று சொன்னால் சரியல்ல, சாகுபடி செய்யட்ட பிரச்சனையோடு சாதி பிரச்சனை ஆகும். சம்பவம் விவசாய வயலில் நடந்தது என்றால் சரிதான். அந்த விவசாய நிலம் என்பது அ.சா.1-ன் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களோ பத்திரப்பதிவு ஆவணங்களோ கிடையாது என்று சொன்னால் மேற்படி இடத்தின் உரிமையாளர்கள் அ.சா.1 டம் ஒப்படைத்துள்ளனர். அந்த இடத்தின் உரிமையாளர் அ.சா.1-க்கு விவசாயம் செய்ய அனுமதி அளித்தது குறித்து எழுத்துபூர்வமான ஆவணங்கள் பார்வையிடவில்லை என்று சொன்னால் ஆமாம். அ.சா.7 ஜெயமாலினி அந்த பிரச்சனைக்குரிய விவசாய நிலத்தை 31.07.2019-ம் தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் மூலம்தான் கிரயம் வாங்கினார் என்றால் நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. 1-ம் எதிரி கோபால்ராமன் நிலத்தின் முந்தைய உரிமையாளரான கண்ணம்மாள் என்பவரிடம் 11.07.2015-ம் தேதியிட்டு தனது பெயருக்கு கிரய ஒப்பந்த பத்திரம் ஒன்றை ஏற்படுத்தி அனுபோகத்தை பெற்றுக்கொண்டார் என்ற விபரத்தை விசாரித்து தெரிந்துக்கொண்டேனோ என்றால் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டதாக எனக்கு தெரியும். ஆனால், சுவாதீனம் எதுவும் 1-ம் எதிரி வசம் ஒப்படைக்கவில்லை. கடந்த 30.09.2019-ம் தேதியன்று பாலசுப்ரமணியன் என்பவர் 1-ம் எதிரி கோபால்ராமன் என்பவரது வயலில் வேலை செய்தது தொடர்பாக அ.சா.1 -ன் பரமசிவனின் சகோதரர் தங்கமணி அவரது மகன்கள் கார்த்திகேயன், தமிழ்நிலவன் ஆகியோர் 1-ம் எதிரிக்கு ஆதரவாக வயலில் வேலைசெய்யக்கூடாது என்று கூறி திட்டி மிரட்டியது

தொடர்பாக திருத்துறைப்பூண்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.460/2019 சட்டப்பிரிவு 294(பி), 323, 324, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால், ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியும் என்ன சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அன்றிலிருந்து நான்கு நாட்களுக்கு பிறகு கடந்த 03.10.2019-ம் தேதியன்று காலை 09.50 மணிக்கு 1-ம் எதிரி கோபால்ராமன் என்பவருக்கு வழக்கு சம்பந்தப்பட்ட வயலில் வேலை பார்த்த பன்னீர்செல்வம் என்பவரை 1-ம் எதிரி கோபால்ராமன் என்பவருக்கு ஆதரவாக எந்த வேலையும் பார்க்க கூடாது என்று மிரட்டி அ.சா.1 பரமசிவம் பன்னீர்செல்வம் என்பவரை சைக்கிளை தூக்கி அடித்து திட்டிமிரட்டியது தொடர்பாக திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.477/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 323, 324, 506(2) இ.த.ச வின் கீழ் அ.சா.1 பரமசிவம் என்பவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 02.11.2019-ம் தேதிக்கு முதல்நாள் 01.11.2019-ம் தேதியன்று 1-ம் எதிரி கோபால்ராமன் தன்னை அ.சா.1-ம் அவரை சேர்ந்தவர்களும் விவசாய பணி செய்யவிடாமல் மிரட்டுவதாகவும், டிராக்டரை கொண்டு பயிரை நாசப்படுத்த முயற்சிப்பதாகவும் தன்னை திட்டி கொலை மிரட்டல்விடுப்பதாகவும் திருத்துறைப்பூண்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் மனு எண்.508/2019 பதிவு செய்யப்பட்டு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் குறித்து விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 02.11.2019-ம் தேதியிலேயே 1-ம் எதிரி கோபால்ராமனுக்கு வேலை பார்த்த ரெங்கசாமி என்பவரை அ.சா.1 பரமசிவம்

என்பவரும், அவரை சேர்ந்த மேலும் நான்கு நபர்களும் கட்டையால் தாக்கி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை உடைத்து அருவாளால் வெட்ட ஓடிவந்து திட்டி மிரட்டியது தொடர்பாக திருத்துறைப்பூண்டி அரசுமருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது திருத்துறைப்பூண்டி காவல்நிலைய உதவி ஆய்வாளர் தேவதாஸ் என்பவர் மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் குற்ற எண்.546/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 427, 506(2) இதச வின் கீழ் எதிர்வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது எட்டு நாட்கள் காலதாமதமாக 10.11.2019-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த பிரச்சனைக்குரிய விவசாய நிலம் குறித்து 1-ம் எதிரி கோபாலராமன் என்பவருக்கும், நிலத்தின் முந்தைய உரிமையாளரான கண்ணம்மாள் பின்னிட்டு கிரயம் பெற்ற அ.சா.7 ஜெயமாலினி என்பவருக்கும் இடையே திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.23/2018 வழக்கு விசாரணை தெரியுமா என்றால் எனக்கு இந்த விபரம் எனக்கு தெரியாது. கண்ணம்மாள் அ.சா.7 ஜெயமாலினி நாகப்பட்டினம் மாவட்ட பத்திரப்பதிவு அலுவலர் திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு சம்பந்தப்பட்ட நிலத்தில் எந்தவித பத்திரப்பதிவும் மேற்கொள்ளக்கூடாது என 1-ம் எதிரி கோபால்ராமன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எண்.23531/2019-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்று வைத்திருந்தார் என்ற விபரம் விசாரணையில் தெரிந்துகெண்டேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கடந்த 2019 டிசம்பரில் நடந்த உள்ளாட்சி மன்ற

தேர்தலில் ஒன்றிய குழு உறுப்பினராக 1-ம் எதிரி கோபால்ராமன் என்பவரும், அ.சா.1 பரமசிவம் என்பவரும் போட்டியிட்டனர் என்றும், 1-ம் எதிரி சுயேட்சையாக போட்டியிட்டதாகவும் அ.சா.1 ஆளுங்கட்சி சார்பாக போட்டியிட்ட விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் போட்டியிட்டார்கள் யார் எந்த கட்சியில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. திருத்துறைப்பூண்டி காவல்நிலையத்தில் 1-ம் எதிரி 02.11.2019-ம் தேதி கொடுத்த புகாரின்பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், சம்பவத்தில் காயம்பட்ட ரெங்கசாமி மருத்துவமனையில் கொடுத்த புகாரில் நடவடிக்கை இல்லை என்பது குறித்தும் 1-ம் எதிரி கோபால்ராமன் சென்னை மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்து வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். ஆனால், அந்த வழக்கு எங்களுக்கு சாதகமாக முடிந்தது. அவ்வாறு வழக்கு முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் ஆமாம். அ.சா.6 ஜீவா என்பவர் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்திருந்தார் என்று சொல்லியிருந்தால் அது தவறு. அ.சா.1-க்கு வெளிப்புற காயங்களோ, வீக்க காயங்களோ எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கண்ணம்மாள் என்பவரை விசாரித்தால் சொத்தின் அனுபவம் எதிரிகளின் வசம் இருந்து வந்தது என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்று சொன்னால் நான் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.1 பரமசிவம் சாராய வழக்கு, மணல் கடத்தல் வழக்கு பின்னனி உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக வந்துள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நடந்ததாக சொல்லப்படும்

சம்பவம் தொடர்பாக எதிரி தரப்பில் ரங்கசாமி என்பவரால் கொடுக்க புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிர்வழக்காக உள்ள நிலையில் காவல்துறையின் நிலை ஆணை பிரிவு 588 ஏ பிரிவின் கீழ் நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர், வரைபடம் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்வது சரியல்ல. அவர் கூறியதன் பேரில் ஆயுதம் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளதும் சரியல்ல. எதிரிகளை தாங்கள் சொல்லிய தேதி, இடம் நேரத்தில் கைது செய்ததாக சொல்லப்படும் விபரமும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.22 16:30:20 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.